***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.287/2010– P.W. 2***

| | |
|---|---|
| *Name* | சிவஞானம் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பணி ஓய்வு) |
| *Father/Husband's Name* | தங்கவேல் |
| *Village* | முக்குலம்தர்க்காசு |
| *Taluk* | மன்னார்குடி |
| *Religion* | |
| *Age* | *60* |

**1 எதிரி. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 311 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி மீண்டும் அழைத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் பணிபதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான். 15.02.2010 ம் தேதியன்று நான் காவல் நிலையத்திலிருந்தேன் என்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. D1/466/DCRB/09 என்ற கரண்ட் பேப்பரில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெரிந்துக்கொள்ளும் வகையில் அந்த ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பணிபுரியக்கூடிய ஒரு நபருக்கு பணி ஒதுக்கிடும் செய்யும்போது அதற்குரிய பணிபதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. ஆஜர் 1ம் எதிரி எந்த தேதியில் சிங்கப்பூர் போனார் எப்போது இங்கு வந்தார் என்பது குறித்த ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரி ஆலங்கோட்டை அரசு பள்ளியில் படித்ததாக சான்று பெற்றுள்ளார் என்பதற்குண்டான ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரியானவர் எந்த கல்வி ஆண்டில்

படித்தார் போன்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எந்த நேரத்தில் பள்ளியில் எந்த தலைமை ஆசிரியர் பணியில் இருந்தார் என்றும், அவரை எப்போது நான் சந்தித்து பேசினேன் என்பது குறித்தும், அவரை எந்த மணிக்கு நான் விசாரித்து என்பதற்குரிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் தங்களது பள்ளியில் படிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்குரிய ஆவணம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த தலைமை ஆசிரியிடம் எந்த சான்றுகளை காண்பித்து ராஜதுரை அந்த பள்ளியில் படித்தாரா இல்லையா என்பது குறித்து விசாரித்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக எந்த காவல் ஆய்வாளர் எப்போது எங்கு வைத்து விசாரித்தார் என்பது குறித்து எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எல்லாம் இந்த வழக்கிற்காக நடக்காக சங்கதிகளை நடந்ததாகவும், தான் சென்று விசாரிததை போன்று வழக்கிற்கு ஏற்போல் சாட்சியாக நான் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நாள், சொன்ன தேதியில் சென்று யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.287/2010– P.W. 4***

| | |
|---|---|
| *Name* | ராஜேந்திரன் |
| *Father/Husband's Name* | சீனி |
| *Village* | மகாதேவப்பட்டிணம் |
| *Taluk* | மன்னார்குடி |
| *Religion* | |
| *Age* | 67 |

**1 எதிரி. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 311 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி மீண்டும் அழைத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026.*

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் கையொப்பம் பெற்ற ஆவணங்களிலுள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்துக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். நான் நல்ல செயல்களுக்காகவும், சில நபர்களின் உதவி செய்யும் பொருட்டு நான் காவல் நிலையம் செல்வேன் என்றால் சரிதான். அந்த வகையில் நான் காவல் நிலையம் சென்றபோது என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. எனது ஊர் மகாதேவப்பட்டினம், பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை ஆகிய கிராமங்கள் அருகருகே உள்ள கிராமங்கள் என்பதால் அங்குளள்ள நபர்கள் ஓரளவு பரிச்சமானவர்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் நான் கையொப்பம் செய்து நீண்ட நாட்களாகிவிட்டது அதனால் சரியாக ஞாபகமில்லை. என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்த கூறப்படுகின்ற

இந்திரஜித் என்பவர் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், நிரப்பப்படா வெள்ளை காகிகத்தில் காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு அந்த ஆவணம் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கண்ணையன் மகன் ராஜா என்பவரை தெரியும். அவர் தற்போது வெளிநாட்டில் இருந்து வருகிறார். அவர் எந்த நாட்டிலிருக்கிறார் என்பது குறித்து எனக்கு சரியாக ஞாபகமில்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.